# தமிழீழத் தனியரசே சகலருக்கும் விடிவு

## பொது மக்களுக்கு ஒரு பகிரங்க அறிக்கை

**பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் உண்ணாவிரதப்**

**போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு**

எமது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான
தமிழீழப் பொது மக்களே, பெற்றோர்களே!

சிங்கள இனவெறிப் பிடிக்குள் சிக்குண்டு தவிக்கும் இன்றைய இளம்பரம்பரையான உங்கள் அருமைச் செல்வங்களின் எதிர்காலக் கல்வி குறித்து நீங்கள் மிகுந்த கவலையில் ஆழ்ந்திருப்பது எமக்கு நன்கு தெரியும். காலம் காலமாக கல்வியையே செல்வமாகக் கௌரவித்து, கல்வியுயர்வையே வாழ்க்கை உயர்வாகக் கொண்டிருந்த எமது சமூகம் இன்று ஒரு புதிய நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. சிங்கள இனவாத ஒடுக்குமுறையின் விளைவாக எமது ஜீவாதாரமான கல்வி உரிமை பறிபோகும் மிகவும் ஆபத்தான சூழ்நிலை தோன்றியிருக்கிறது. இந்த சோதனையான காலகட்டத்தில் நாம் எமது எதிரியின் சவாலை எதிர்கொள்வது எப்படி? எமது எதிர்காலப் பரம்பரையின் சுபீட்சத்திற்கு வழிகோலுவது எங்ஙனம்? எமது பிரச்சனைகள் அனைத்திற்கும் நிரந்தரமான தீர்வுதான் என்ன? இந்தக் கேள்விகள் இன்று ஈழத்தமிழர் அனைவரையுமே அரித்தபடி இருக்கிறது. இந்த இக்கட்டான, குழப்பகரமான சூழ்நிலையில் உங்கள் நம்பிக்கைக்கும் பேராதரவுக்கும் பாத்திரமான விடுதலை இயக்கம் என்ற ரீதியில் கல்விப் பிரச்சனையில் எமது நிலைப்பாட்டையும், நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும், நிரந்திரமான தீர்வுக்கு நாம் வரித்திருக்கும் புரட்சித் திட்டத்தையும் இங்கு எடுத்து விளக்குவது அவசியமாகிறது.

தமிழருக்கு எதிராக பல்வேறு பரிமாணங்களில் தலைதூக்கிய இனவாத ஒடுக்குமுறையானது எழுபதின் ஆரம்பத்திலிருந்தே தமிழரின் கல்வி வளர்ச்சிக்கு ஆப்பு வைக்க முனைந்தது. அன்றிலிருந்து, உயர் கல்வி வாய்ப்பின் கதவுகள் எமக்கு மெல்ல, மெல்ல பூட்டப்பட்டு வந்தன. ஆனால் கடந்த கலவரத்தில் எழுந்த பயங்கரமான நிலைமை தமிழ் மாணவரின் உயர்கல்விப் பிரச்னையை ஒரு உயிர்ப் பிரச்சனையாக மாற்றியது. உயிரைப் பணயம் வைத்து உயர்கல்வி பெறவேண்டிய மோசமான நிலை எழுந்தது. சிங்களப் பேரினவாதத்தின் விளைநிலங்களாக மாறியிருக்கும் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவ மாணவியரின் உயிருக்குப் பாதுகாப்பு இருக்கவில்லை. தமிழனின் இரத்தத்தை சதா குடித்துவரும் சிங்கள இனவாத அரசிடம் பாதுகாப்பை எதிர்பார்ப்பதும் முட்டாள்தனம். இந்தச் சூழ்நிலையில் எமது விடுதலை இயக்கம் இடம்பெயர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழக மாணவருக்கு ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுத்தது. தெற்கிலுள்ள

பல்கலைக்கழகங்கள் எந்நேரத்திலும் மீண்டும் ஓர் 'வெலிக்கடையாக' மாறும் ஆபத்து உண்டு; இந்நிலையில் இடம் பெயர்ந்த மாணவர்கள் தமிழீழத்தில் தமது கல்வி வாழ்வை நிலைநிறுத்துவதற்காகப் போராட வேண்டுமே தவிர, சிங்கள நாட்டின் 'கொலைக்களங்களுக்கு' போகக் கூடாது என நாம் ஒரு அழைப்பை விடுத்தோம்.

இதற்கிடையில், இடம்பெயர்ந்த தமிழ் மாணவர்கள் தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களில் தமக்குப் பாதுகாப்பில்லை என்பதை நன்கு உணர்ந்ததால் அங்குத் திரும்பிச் செல்வதில்லை என முடிவெடுத்தனர். அத்தோடு தொடர்பான சகல போதனா பீடங்களையும் தமிழ்ப் பகுதிகளுக்கு மாற்றித் தருமாறு ஒரு கோரிக்கையையும் முன்வைத்தனர். இந்தக் கோரிக்கை நியாயமானது, நீதியானது, நாகரிகமானது—என்பதே எமது இயக்கத்தின் நிலைப்பாடாகும். ஆகவே, இக்கோரிக்கைக்கு எமது இயக்கம் பூரண ஆதரவை நல்கியதோடு இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட போராட்ட நடவடிக்கைகளையும் ஆதரிக்க முன்வந்தது. எமது சொந்தப் பிரதேசத்தில் எமது வாழ்வு நிலைகளை வளப்படுத்துவது எமது தேசிய தன்மையையும் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வையும் மேலும் வலுப்படுத்துவதோடு இம் முயற்சி எமக்குத் தகுந்த பாதுகாப்பை அளிக்கும் என்பதும் திண்ணம். தனித்துவமான, தமிழ் தேசிய பாங்குடைய, சுதந்திரமான பொருளாதார வாழ்வை நாம் எமது பிரதேசத்தில் கட்டி எழுப்புவதன் அவசியத்தை நாம் சதா வலியுறுத்தி வந்திருக்கிறோம். நாம் சிங்கள தேசத்தில், சிங்கள அரச அமைப்பின்கீழ் எந்த வகையிலும் தங்கியிராது, எமது மண்ணில் எமது காலையூன்றி, சுயபூர்த்தியுடன் வாழும் நிலைகளை ஏற்படுத்துவது அவசியம். சிங்கள இன அழிப்புத் திட்டத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இதுவே சிறந்த வழியென்பதைக் கடந்த காலக் கசப்பான அனுபவங்களிலிருந்து நாம் புரிந்துகொள்ளலாம். ஆகவே, எமது இளைய பரம்பரை தமது கல்வி வாழ்வை தமிழ் மண்ணில் நிலையூன்றவிட முடிவு செய்ததை நாம் ஆதரித்தோம். எமது பிரதேசங்களின் சுய-அபிவிருத்திக்கு ஏற்ற கல்வி முறையினை மேம்படுத்தவும், அர்த்த புஷ்டியான அறிவாராய்ச்சியில் ஈடுபடவும், எமது தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஒருமுகப்படுத்தி, வலுப்படுத்தவும் இம்முயற்சி வழிகோலும் என்பதே எமது கருத்தாகும்.

இடம்பெயர்ந்த தமிழ் மாணவரின் கோரிக்கைக்கு தமிழீழப் பொது மக்களின் நல்லாதரவு பெருகியது. ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்களாய் தமிழீழம் எழுச்சிபெற்றது. வெகுசன ஹர்த்தால் ஒன்றும் மிக வெற்றிகரமாக இடம்பெற்றது. ஆனால் சிங்கள அரசும், அதன் கல்வி அதிகார பீடமும் தமிழ் மாணவரின் கோரிக்கையை முற்றாகப் புறக்கணித்து வந்தது. இதனால் 31-12-83ல் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்

தனர். தமது உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அரசாங்கம் செவி சாய்க்காது போனால் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொள் வதென இடம் பெயர்ந்த தமிழ் மாணவர் ஒன்றியம் முடிவெடுத்தது. அமைதி வழி தழுவிய அறநெறிப் போராட்டங்களுக்கு அரசாங்கம் அசைந்து கொடுக்காது என்பது எமக்குத் தெரியும். இந்தப் போராட்ட வடிவம் வரலாற்று ரீதியாக முன்னெடுக்கப்பட்டுப் படுதோல்வி கண்ட கசப்பான அனுபவங்களை நாம் மறந்துவிடவில்லை. எனினும் தேசிய சுயாதிபத்தியத்தைப் பேணும் ஒரு நியாயமான கோரிக்கையின் அடிப் படையில் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் என்பதாலும், வெகுசன எழுச்சியைத் தூண்டிவிட்டு, மக்களிடையே தேசிய விடுதலை விழிப் புணர்வை பிறபபிக்கும் தன்மைகள் அடங்கியிருந்ததாலும் தமிழ் மாணவர் தமது வரையறைக்கு ஏற்பத் தமது கொதிப்புணர்வை ஆட்சி யாளருக்கு எடுத்துககாட்டககூடியதாக அமைநததாலும் இந்த உண்ணா விரதப் போராட்டத்திற்கு எமது இயககம ஆதரவை அளிததது.

உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமிழீழம் எங்கும் பரவலாக வெகுசன ஆதரவு திரண்டபோதும் ஆட்சியாளர் எவ்விதத்திலும் அசைந்து கொடுக்கவில்லை. இதனால் உண்ணாவிரதமிருந்த மாணவர் தமது போராட்டத்தை அறவழியில அதிதீவிரமாக்க முடிவு செய்தனர். இதன் பிரகாரம் 9-1-84லிருந்து ஒன்பது மாணவர் (நான்கு மாணவியர் உட்பட) சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில குதித்தனர். இதனால் போராட்டம் ஒரு புதிய திருப்பத்தை அடைந்தது. சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரமபிக்கபபட்டதிலிருந்து தமிழீழம் எங்கும் பதட்ட நிலை தோன்றியது. மாணவர்க்கு அனுதாபம் தெரி விக்கும் வகையில் வீதிகள் எங்கும் கறுப்புககொடிகள் முளைத்தன. கதவடைப்பு, கல்லூரியடைப்புகளுடன் அரசாங்க ஜீப் வண்டிகளுக்கு தீவைப்பு, அரசாங்கக் கட்டிடங்களுக்கு குண்டுவீச்சாக சம்பவங்களும் நிகழ்ந்தன. சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பமாகி ஒரு வாரம் ஆகியும் அரசாங்கம் தனது கண்மூடித்தனமாக போக்கை இறுக்கமாகக் கடைப்பிடித்தது. அதேவேளை, மாணவர் போராட்டத்தை ஆயுத அடக்குமுறையால் முறியடிக்க அரச தரபபில் திட்டங்கள் தீட்டப்பட்டன. அதன் முதற்கட்டமாக யாழ் பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு அரசு உத்தரவிட்டது. அடுத்த கட்டமாக, உண்ணாவிரதிகளை பலாத்கார மாக கடத்திச் செல்லவும் திட்டமிடப்பட்டிருந்தது. இதனால் அரச படைகள் எந்த நேரமும் குறுக்கிடலாம் என்ற அச்ச நிலை எங்கும் பரவியது.

ஜனவரி 16ந்திகதி பிற்பகல். உண்ணாவிரதிகளின் உடல்நிலை கவலைக்கிடமாகியது. ஒரு மாணவி மரணத்துடன் போராடிக் கொண் டிருந்தார். அவரது நிலைமை அபாயகரமாக இருந்ததால் வைத்திய

நிபுணர் ஒருவர் வரவழைக்கப்பட்டார். மாணவியை உடன் மருத்துவ மனையில் அனுமதிக்குமாறும், இல்லாதுபோனால் ஒரு சில மணி நேரத்தில் அவரது உயிருக்கு ஆபத்து நேரிடலாமெனவும் வைத்தியர் எச்சரித்தார். ஏனைய உண்ணாவிரதிகளும் மரணத்தின் விளிம்பை நெருங்கிக் கொண்டிருந்தனர். இதற்கிடையில் ஆயிரக்கணக்கில் மக்களும் அங்கு குழுமினர். மாணவப் போராளிகள் எவரும் மரணிப் பதை மக்கள் விரும்பவில்லை. அறவழிப் போரின் ஆன்மீகத் தன்மையை புரிந்துகொள்ள முடியாத அசுரத்தனமான ஒரு அரசுக்கு அநியாயமாக உயிர்களைப் பலிகொடுக்க மக்கள் தயாராக இல்லை. எப்படியும் இவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற மனிதாபிமான உணர்வே எங்கும், எவரிடமும் மேலோங்கியிருந்தது. இதற்கிடையில் மாணவ ஒன்றியக் குழுவைச் சார்ந்த சிலர் உண்ணாவிரதிகளை பொலீஸாரிடம் ஒப்படைத்து மருத்துவ மனையில் அனுமதிக்கத் திட்டமிட்டனர். இந்த முடிவானது உண்ணாவிரதிகளை ஒரு அரச அமைப்பிடம் சரணாகதி யடையச் செய்வதற்கு ஒப்பானதாகும். பொலீஸாரிடம் தாம் கையளிக் கப்படுவதை உண்ணாவிரதிகளே மூர்க்கமாக எதிர்த்தனர். இப்படியான குழப்பகரமான, சிக்கலான, பதட்டமான சூழ்நிலையில், எவருமே எவ்வித தீர்க்கமான முடிவும் எடுக்க முடியாது திணறிக்கொண்டிருந்த சமயத்தில், மக்களின் முன்னணிப் படையாகிய எமது இயக்கம் இவ்விவகாரத்தில் நேரடியாகத் தலையிட்டது. உண்ணாவிரதிகளை அழைத்துச் சென்று அவர்களது உயிரைப் பேணிக்காக்க நாம் முன்வந்தோம். உண்ணா விரதிகளும் தமது பூரண சம்மதத்தை தெரிவித்து எம்மோடு கூடவந்தனர். எமது நடவடிக்கையை அங்கிருந்த மக்கள் கூட்டமும் மனப்பூர்வமாக ஆதரித்தது. இன்று இம்மாணவ மாணவியர் உணவருந்தி உடல் நலத்துடன் சேமமாக இருக்கின்றனர். பாதுகாப்பாக இருக்கின்றனர்.

எமது அன்புக்குரிய தமிழீழ மக்களே,

உங்கள் செல்வங்களை நாம் மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றிச் சென்றது தவறான செயலாகுமா? சிங்கள இனவாத அரக்கனின் முகத்தில் கரிபூசிவிட்டு இம்மாணவர்களை நாம் அரவணைத்துக் கொண்டது இழி செயலாகுமா? நிச்சயமாக, நீங்கள் எமது சாதுரியமான, துணிச்சலான, தீர்க்கமான செயலைப் பாராட்டவே செய்வீர்கள்.

ஆனால், மக்கள் விடுதலைக் கழகம் என்ற பெயரில் இயங்கும் உமா மகேஸ்வரனின் குழுவினர் எமது செயலை மிகக் கேவலமான முறையில் கண்டித்துள்ளனர். ஆயுத முனையில் அகிம்சைப் போராளி களை நாம் பலாத்காரமாகக் கடத்திச் சென்றோம் என்று துண்டறிக்கை களையும் சுவரொட்டிகளையும் வெளியிட்டு எமது புனித இயக்கத்தை களங்கப்படுத்துவதுடன் மக்களையும் தவறான முறையில் குழப்ப முயல்

கின்றனர். "அகிம்சைப் போராட்டத்தை பலாத்காரமாக ஆயுத முனையில் கேவலப்படுத்திய, கேலிக்கிடமாக்கிய, காட்டிக்கொடுக்கும், பிற்போக்குக் கும்பலை, சதிகாரர்களை, எதிர்ப் புரட்சியாளர்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்" என இவர்களது துண்டறிக்கை ஒன்று கூறுகிறது.

இந்த முட்டாள்தனமான விமர்சனத்தை, உண்மையை மறைக்கும் விசமப் பிரச்சாரத்தை, நீங்களே நன்கு எடைபோட்டுப் பார்க்கவேண்டும். இவர்களது உண்மையான நோக்கம்தான் என்ன? இவர்கள் எதனை எதிர்பார்த்தார்கள்?

முதலாவதாக, நாம் ஆயுதம் தாங்கி வந்தது மக்களையோ, மாணவர்களையோ மிரட்டவோ, தாக்கவோ அல்ல என்பதனை சகலரும் அறிவார்கள். மாணவர்களின் பாதுகாப்புக்காகவே நாம் ஆயுதபாணி களாக வந்தோம். இரண்டாவதாக, நாம் உண்ணாவிரதிகளை பலாத்காரமாகக் கடத்திச் செல்லவில்லை. அவர்களது மனப்பூர்வமான சம்மதத்துடனேயே நாம் அவர்களை அழைத்துச் சென்றோம். மூன்றாவ தாக, உண்ணாவிரதப் போராட்டத்தை கேவலப்படுத்துவதோ, அல்லது முறியடிப்பதோ எமது நோக்கமாக இருக்கவில்லை. உண்ணாவிரதி களின் உயிரைக் காபந்து செய்வதே எமது பிரதான நோக்கமாக இருந்தது. மனித உயிருக்கு மதிப்பளிக்காத, ஈவிரக்கமற்ற, இனவாத அரசுக்கு, தமிழினத்தின் உயிர்கள் அநியாயமாகப் பலியிடப்படுவதை நாம் விரும்பவில்லை. எந்த ஒரு மனிதாபிமானியும் அதை விரும்பப்போவ தில்லை. மக்களும் அதை விரும்பவில்லை என்பதும் எமக்குத் தெரியும். எனவே நாம் எடுத்த முடிவு மனிதாம்சமானது, அறவழி சார்ந்தது, மக் களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பது. கழகம் மாரடிப்பது போன்று நாம் சதிகாரர்களுமல்ல, பிற்போக்காளருமல்ல, ஆயுதங்களைப் பாவிக்கத் தெரியாதவர்களுமல்ல. அகிம்சைப் போரை அவமானப்படுத்துபவர்களு மல்ல. நாம் மக்களின் பாதுகாப்புப் படை.

இவர்கள் எதிர்பார்த்ததுதான் என்ன? சிங்கள இனவாதப் பூதத் திற்கு ஒன்பது தமிழ் இளம் தளிர்களைப் பலிகொடுத்திருக்க வேண்டும் என்பதையா? மக்களைக் கிளர்ந்தெழச் செய்து சிங்கள இராணுவ வெறி யாட்டத்திற்கு மேலும் உயிர்ப்பலி கொடுத்திருக்க வேண்டும் என்பதையா? மீண்டும் ஒரு இனப்பூகம்பம் ஏற்பட்டு பேச்சு வார்த்தை என்ற நாடகம் குழம்பியிருக்க வேண்டும் என்பதையா?

வட்டமேசைப் பேச்சு வார்த்தைகளால் தமிழ்த் தேசிய இனப் பிரச்னைக்கு எந்தவொரு உருப்படியான தீர்வும் ஏற்படப் போவதில்லை என்பது எமது தெளிவான நிலைப்பாடு. இந்த சமரஸப் பேச்சுக்களை

சிங்கள பௌத்த இனவாத சக்திகளே முறியடித்துவிடும் காலம் தூரத்தில் இல்லை என்பதும் எமக்கு தெரியும். கூட்டணித் தலைமை மூக்குடைப் பட்டு தமிழ் மக்களை எதிர்கொள்ள முடியாத சூழ்நிலையும் பிறக்கும். சிங்கள, இனவாத அரசு தனது அசாத்தனத்தைத் தானாகவே தோலுரித்துக் காட்டும். பேச்சு வார்த்தை என்ற நாடகம் தானாகவே முடிவற்ற கதையாக முடிவுறும். இயற்கையாகவே இறந்து கொண் டிருக்கும் ஒன்றை நாமேன் கொன்றுவிட முயலவேண்டும்? அப்படிச் செய்வது ராஜதந்திரம் ஆகாது. எனவே மாணவர் போராட்டத்தை திசை திருப்பி பேச்சு வார்த்தையை குழப்பிவிடலாம் என சிந்திப்பதைப் போன்ற முட்டாள்தனம் எதுவுமில்லை. இது, இவர்களது அரசியல் ஞான சூன்யத்தைப் பறையடித்துக் காட்டுகிறது.

ஆயுதப் போராட்டம் மூலமே தமிழீழத்தை வென்றெடுக்க முடியும் என சதா வலியுறுத்தி வந்த இந்தக் கும்பல், திடீரென அகிம்சைப் போராட்டத்தின் ஆன்மீக சக்தி பற்றி தத்துவார்த்தம் பேசுவது எமக்கு வித்தையைக் கொடுக்கிறது. ஒரு விடுதலைப் போராட்ட வரலாற்றில் போர் யுக்திகளிலும், போராட்ட வடிவங்களிலும் மாறுதல்கள் எழுவது உலகானுபவம் 'காட்டும் உண்மை. தமிழீழ அரசியல் வரலாற்றில் அகிம்சை வழி தழுவிய அறநெறிப் போராட்டங்கள் நன்கு பரீட்சிக்கப் பட்டுப் படுதோல்வி கண்ட போராட்ட வடிவம் என்பதை யாவரும் அறிவர். எமது விடுதலைப் போராட்ட வளர்ச்சியில் ஆயுதப் புரட்சிப் போராட்ட வடிவம் தோற்றம் கொண்டதும் புரட்சிகர ஆயுதப் போர் விரிவடையும் நிலையிலுள்ளதும், அதன் வாயிலாகவே விடுதலையை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதும் இன்று சகலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விசயம். எதார்த்த நிலைமை இவ்வாறிருக்க, அகிம்சை போராட்டத்தை முற்போக்கானது, புரட்சிகரமானது எனக் கழகத் தினர் புகழ்பாடுவது அவர்களது பிற்போக்கான பார்வையையே காட்டு கிறது.

எமது எதிரியிடம் கோரிக்கைகளை முன்வைத்து, சலுகைகளைக் கேட்டு, அவனது மனிதாபிமானத்திற்கு மன்றாட்டமாக தொடுக்கப்படும் போராட்டங்கள் வேறு. எதிரியிடம் எவ்வித சலுகைகளையும் எதிர்பாராது, எமது உரிமைகளை நாமே நிலைநாட்ட, எமது சுதந்திரத்தை நாமே நிலைநிறுத்த தொடுக்கப்படும் போராட்டங்கள் வேறு. முன்னதினை, அறவழிப் போராட்டங்களால், சமரசப் பேச்சுக் களால் முயன்று பார்க்கலாம். பின்னதினை ஆயுதப்போராட்டம் மூலமே முன்னெடுக்க முடியும். மனிதாபிமானமற்ற ஒரு எதிரியிடம் மனுநீதி பெறமுடியாது என்பதால் அகிம்சைப் போர்களை தொடுப்பதில் அர்த்தமில்லை. எமது சுதந்திரத்தை, எமது இறைமையை, நாமே நிலைநாட்ட வேண்டுமாயின் புரட்சிகர ஆயுதப்போரைத் தவிர எமக்கு

வேறு வழியில்லை. ஆகவே எமது இளம்பரம்பரையை, எமது மக்கள் சமுதாயத்தை, இந்தப் புரட்சிகரமான விடுதலைப் பாதையை நோக்கி நெறிப்படுத்துவதை விட்டுவிட்டு தற்காலிகமான அரசியல் இலாபங் களுக்காக வரலாற்றால் தூக்கி வீசப்பட்ட பிற்போக்கான பாதையில் இட்டுச் செல்ல முயல்வது உண்மையான மக்கள் பாதை அல்ல. அது மக்கர் பாதை.

இடம்பெயர்ந்த மாணவரின் உயர் கல்விப் பிரச்னையின் சிக்கலான பரிமாணங்களை நாம் அறிவோம். அவர்களது நியாய பூர்வமான கோரிக்கையை நாம் முழுமனதாக ஆதரிக்கிறோம். அவர்களது உறுதிப்பாட்டையும் அர்ப்பணிப்பையும் நாம் கௌரவிக்கிறோம். எமது இளம் பரம்பரையின் கல்வி வாழ்வு எமது மண்ணில் நிலையூன்றி எமது தேசியக் கட்டமைப்பு மேலும் உரமடைவதையே நாம் விரும்புகிறோம். எனவே, அவர்களது போராட்டத்திற்கு எமது ஆதரவு என்றும் இருக்கும். ஆனால், ஒன்றை மட்டும் நாம் இங்கு உறுதியாகச் சொல்ல விரும்பு கிறோம். அதாவது, பூதாகரமாக வளர்ந்துவிட்ட எமது மக்களின் பலதரப் பட்ட பிரச்னைகள் எல்லாவற்றிற்கும் ஒரே தீர்வு, நிரந்திரமான தீர்வு தமிழீழத் தனியரசாகும். எமது பிரச்னைகளின் வளர்ச்சியும், ஒடுக்குமுறை யின் அழுத்தங்களும் இந்த உருப்படியான தீர்வையே உறுதிப்படுத்து வதாக இருக்கிறது. ஆயுதமேந்திய வெகுசனப் போராட்டப்பாதையே எமது விடிவுக்கான பாதை. இடிந்து போன போராட்டப் படிக்கட்டுகளில் ஏறித் தடம் புரண்டு விழுந்துவிடாமல், நாம் காட்டும் புரட்சிப் பாதையில், புலி களின் பாதையில், வெற்றிப் பாதையில் புதிய இளம் தலைமுறை அணிதிரள வேண்டும். அதுவே எமது மக்களினது சுபீட்சத்திற்கான பாதை.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அரசியற் குழு

தமிழீழ விடுதலைப் புலிகள்

28-1-84